340

# PRINCE EDWARD
# The Prince of Wales

OFFICE OF THE REGISTRAR O
22 APR 1925
MADRAS

## எட்வர்ட் இளவரசர்

BY

Rao Bahadur M. C. Rajah, M.L.C.,

Fellow of the Madras University: Superintendent, Wesley College Lower School: Honorary Presidency Magistrate: Honorary Asst. Registrar of Co-operative Societies: Member, H. R. H. The Prince of Wales Executive Committee: District Commissioner, Boy Scouts, Madras & Chingleput District.

MADRAS
PRINTED AT THE HUXLEY PRESS
1925

# PRINCE EDWARD
# The Prince of Wales

## எட்வர்ட் இளவரசர்

OFFICE OF THE REGISTRAR OF
22 APR 1925
MADRAS

BY

Rao Bahadur M. C. Rajah, M.L.C.,

Fellow of the Madras University; Superintendent, Wesley College Lower School; Honorary Presidency Magistrate; Honorary Asst. Registrar of Co-operative Societies; Member, H. R. H. The Prince of Wales Executive Committee; District Commissioner, Boy Scouts, Madras & Chingleput District.

MADRAS
PRINTED AT THE HUXLEY PRESS
1925

923.142
3903

## முகவுரை

பல்லாற்றானும் மாணவர்கட்கு நன்னெறியை உண்டாக்குதற்கென என்னால் இயற்றப் பெற்ற இளவரசர் எட்வர்ட் என்னு நூலை தங்களது பாடசாலையில் பாடமாக வைத்து ஆதரிக்கும் மானேஜர்களுக்கும் தலைமை உபாத்திமார்கட்கும் நான் நன்றி பாராட்டுகிறேன்.

இந்நூலை இரண்டாமுறை பதிப்பிக்குங்கால் இதற்கு அநுகூலமாக திருத்தங்கள் செய்தும் கண்ணுற்றும் கொடுத்தவர்களாகிய சென்னை ஆதி திராவிட தரும பாடசாலை கௌரவ சூப்பிரன்டெண்டெண்ட் ஸ்ரீமதி ரங்கநாயகி ராஜன் அம்மாள் அவர்களுக்கு என்றென்றும் கடமைப் படுகிறேன்.

பரங்கிமலை
11-3-25

ம. சி. ராஜா.

# எட்வர்ட் இளவரசர்

பிள்ளைகளே, உங்களுக்குக் கதை கேட்பதில் அதிகப் பிரியம் அல்லவா? உங்கள் பாட்டியார் உங்களுக்குப் பல கதைகள் சொல்லியிருப்பார். நான் இப்பொழுது உங்களுக்கு ஒரு புதுக் கதை சொல்லப்போகிறேன். நமது எட்வர்ட் என்னும் வேல்ஸ் இளவரசரைப் பற்றிய கதை இது வரையில் நீங்கள் கேட்டுள்ள கதைகளைக்காட்டிலும் மிக இன்பமானது.

எட்வர்ட் இளவரசர் 1894-ம் வருஷம் ஜூன் மாதம் 23-ஆம் தேதி பிறந்தார். அப்பொழுது மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியார் நம் சக்கரவர்த்தினி.

விக்டோரியா மகாராணியார் நம்மை 63-வருடங்கள் நன்றாக ஆண்டுவந்தார். அவ்விராணியார் தமது அரசாட்சியில் நமக்கு பல நன்மைகளைச் செய்தார். அவ்விராணியாரை நாம் ஒரு பொழுதும் மறக்க முடியாது. இம்மேன்மை பொருந்திய விக்டோரியா மகாராணியாரே நம் எட்வர்ட் இளவரசருக்குப் பெரிய பாட்டியார். நம் எட்வர்ட் இளவரசர் மேல் நம் மகாராணியாருக்கு அன்பு அதிகம். நம் மகாராணியார் நம் இளவரசருக்குப் பல விலை உயர்ந்த வெகுமதிகளைக் கொடுத்தார். நீங்கள் உங்கள் பாட்டியாரை நேசிப்பதுபோல் நம் இளவரசரும் தம் பெரிய பாட்டியாரை அதிகமாக நேசித்தார்.

நமது இளவரசருக்கு ஏழு பெயர்கள் உண்டு. இப்பெயர்களைக்கேட்க உங்களுக்குப் பிரியம் என்று எண்ணுகிறேன். அவை எட்வர்ட், ஆல்பர்ட், கிரிஸ்டியன், ஜியார்ஜ், ஆண்ட்ரூ, ப்ரேட்ரிக், டேவிட் என்பவையே. இப்பெயர்க

ளுள் டேவிட் எனும் பெயரே அதிகமாக அரண்மனையில் வழங்கிவந்தது.

இவர் பெற்றோருக்கு இவர் மீது அதிக ஆசை. ஆகையால் இவரை அவர் அதிக ஊக்கத்துடன் வளர்த்து வந்தார்.



விக்டோரியா மஹா ராணியார்.

நமது சக்கரவர்த்தி ஐந்தாவது ஜியார்ஜ் மன்னர் இவர் தந்தையார். நம் சக்கரவர்த்தினி மேரி மகாராணியார் இவர் தாயார். நம் ஐந்தாவது ஜியார்ஜ் மன்னருக்கு ஐந்து புத்திரர்களும் ஒரு புத்திரியும் உண்டு. அவர்கள் எட்வர்ட் இளவரசர், ஆல்பர்ட் இளவரசர், மேரி இளவரசி, ஹென்ரி இளவரசர், ஜியார்ஜ் இளவரசர், ஜான் இளவரசர் என்பவர்களே. இவர்களுள் நம் எட்வர்ட் இளவரசரே மூத்தவர். ஆகையால் நம் எட்வர்ட் இளவரசருக்கு வேல்ஸ் இளவரசர் என்ற பட்டப்பெயர் கிடைத்தது.

இவருடைய இளைய சகோதரியாகிய மேரி இளவரசியாருக்கு 1921-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் இங்கிலண்டில் கலியாணம் நிச்சயமானது. லாஸிலஸ் என்னும் ஒரு பிரபு இவ்விளவரசியாரைத் திருமணம் புரிந்தார். அவர் ஒரு சிறந்த போர் வீரர். இந்த விசேஷ காலத்தில் நம் எட்வர்ட் இளவரசர் அங்கில்லை. நம்மைக்காண ஆவல் கொண்டு நம் தேசமாகிய இந்தியாவுக்கு அவர் முன்னதாக வந்து விட்டார். இவர் பெற்றோர் இவரை இளமையில் அடக்கம்,

அன்பு, ஈகை முதலிய நற்குணங்களில் பழக்கி வந்தார். இளமைப் பருவத்தில் இவர் முகமலர்ச்சியும், இனிய நோக்கும், மழலைச் சொல்லும் எல்லோரையும் மகிழ்வித்தன.

ஒரு நாள் ஒரு தையற்காரன் நம் இளவரசருக்கு உடுப்புத் தைத்து வந்து அரண்மனை வாசலில் நின்று கொண்டிருந்தான். தையற்காரன் வெளியில் நின்றிருந்ததைக் கண்டு மனம் இரங்கி வெளியில் ஓடிவந்து அவனை அவர் உள்ளே அழைத்தார். தையற்காரனோ உள்ளே போகவில்லை. "நீ பயப்படவேண்டாம், உள்ளே ஒருவரும் இல்லை, என் பாட்டனார் தான் இருக்கிறார். நீ தாராளமாக வரலாம்," என்று மறுபடியும் அவனை நம் இளவரசர் கூப்பிட்டார். பிள்ளைகளே, நீங்களும் நம் இளவரசரைப்போல் எளியாரிடத்தில் அன்பு பாராட்ட வேண்டும்.

நம் இளவரசரின் பாட்டனார் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர்தான் ஏழாவது எட்வர்ட் மன்னர். நம் வேல்ஸ் இளவரசர் மீது இவருக்கு அன்பு அதிகம். இவர் செல்வப் பிள்ளையாக நம்மிளவரசர் விளங்கி வந்தார்.

எட்டாவது வயதில் நம்மிளவரசர் கல்விகற்க ஆரம்பித்தார். ஹேன்சல் எனும் போதகாசிரியரிடம் இவர் எல்லா நூல்களையும் கற்றுத் தேர்ந்தார். இவருக்குக் காவ்யங்களில் வெகு பிரியம். இவருக்கு ஞாபகசக்தி அதிகம். இவர் இனிய குரலோடு நன்றாய்ப் பாடுவார்.

ஒருநாள் பிள்ளைகளுக்கு என்று ஏற்பட்டிருந்த ஓர் விருந்துக்கு நம்மிளவரசர் போயிருந்தார். அப்பொழுது ஓர் மாது இவருக்கு ஓர் பட்டாக்கத்தியை வெகுமதியாகக் கொடுத்தாள். இவர் அதைப் பெற்று சந்தோஷித்தார். பிறகு இவர் அதைத் தன் தந்தைக்குக் காட்டினார். அதைக் கண்ட அவர் தந்தையார் கத்தி வெகுமதிசெய்த மாதுக்கு வந்தனமளிக்கத் தம் மகனுக்குச் சொன்னார். அவ்வாறே

தடை செய்யாமல் உடனே இவர் ஒரு நாற்காலியின்மேலேறி நின்றுகொண்டு அப்பெண்மணியை நோக்கி, "நீங்கள் எனக்கு அளித்த வெகுமதிக்காக வந்தனமளிக்கிறேன். இந்த நாளை நான் எப்பொழுதும் மறவாமல் ஞாபகத்தில் வைப்பேன்" என்று சொன்னார். பிள்ளைகளே! இவர் பெருந்தன்மை எவ்வளவு மெச்சத்தகுந்தது பாருங்கள். இப்படிப்பட்ட நம்மிளவரசரை நீங்களெல்லோரும் நிச்சயமாய் நேசிக்கவேண்டியது அவசியம்.

நம்மிளவரசர் கருணை நிறைந்தவர். உங்களெல்லோரையும் அவர் நேசிக்கிறார். எல்லாப் பிராணிகளையும் நேசிக்கிறார். அவர் எந்தப் பிராணியையும் அடிப்பதில்லை. சிலர் தங்கள் நாய்களின் வாலை வெட்டும் வழக்கத்தை நீங்கள் கண்டிருப்பீர்கள். அப்படிச் செய்வது அந்த நாய்களுக்கு வேதனையை கொடுக்கும். இவர் ஒருநாள் ஒருவன் தன் நாய் வாலை வெட்டுவதைப் பார்த்து அதற்காக மிகவும் துக்கித்தார். பிறகு அவர், "நான் தகுந்த வயதை அடைந்து ராஜாவானால் நாய்களின் வாலை ஒருவரும் வெட்டக்கூடாது என்று ஒரு சட்டம் அவசியம் ஏற்படுத்துவேன்" என்று சொன்னார். பிள்ளைகளே, இப்படிப்பட்ட தயாள குணமுள்ள நம்மிளவரசரைக் காண நீங்கள் ஆவலாக இருக்கிறீர்கள் என்பதிலும், அவரைப்பற்றி அதிகம் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்கள் என்பதிலும் சந்தேகமில்லை.

ஒரு நாள் நம்மிளவரசருக்கு உடம்பு அசௌக்கியமாயிருந்தது. அப்பொழுது அவருக்குதவியாக 'நர்ஸ்' என்று சொல்லப்படும் ஒரு ஆயாள் அருகில் இருந்தாள். பிள்ளைகளே! வியாதியாய் இருக்கும்பொழுது நீங்கள் வியாதியின் கொடுமையினால் கோபங்கொள்ளுதல் வழக்கமல்லவா? அது போல் ஒரு நாள் நம்மிளவரசருக்கு அந்த ஆயாள் வியாதிக்கு மருந்து கொடுக்கும்போது அவள் மீது

சிறிது கோபங்கொண்டார். அதற்கு அவ்வாயாள் அவர் மேல் கோபங் கொள்ளாமல் முன்பொருகாலத்தில் வியாதியாயிருந்த ஒரு சிறு பெண்மணியின் பொருமையையும் குணத்தையும் அவரிடம் புகழ்ந்து பேசினுள். அவர் அதைக் கேட்டு சந்தோஷித்து அந்தச் சிறு பெண்மணியின் பொறுமைக்கு அவளை மிக மெச்சினுர். அதன்றியும், அச்சிறு பெண்மணிக்குத் தம்மால் மிகவும் மதிக்கப்பெற்ற யுத்த வீரர்களுள் முக்கியரான லார்ட் ராபர்ட்ஸ் என்பவரின் உருவ பிம்பமொன்றை அப்பெண்மணியின் குணத்தைக் கொண்டாடியதற்கு அடையாளமாய் அவ்வாயாளிடம் வெகுமதியாகக் கொடுத்து அனுப்பினுர். அவ்வுருவபிம்பம் நம் இளவரசரின் மதிப்பில் விலை மதிக்கமுடியாத உயர்ந்த பொருள்களி லொன்று. பிள்ளைகளே! இவரது பெருந்தன்மையையும், கொடையின் சிறப்பையும் கேட்டறிந்த நீங்கள் அவ்வாறே நடக்க முயல வேண்டும்.



ஏழாவது எட்வர்ட் அரசர்.

பதின்மூன்ருவது வயதில் இவர் மாலுமிக் கலாசாலையில் கல்விகற்க ஆரம்பித்தார். அக்கலாசாலையில் இவர் சாதாரண பிள்ளையைப்போல் படித்து வந்தார். அங்குப் படிக்கும் எல்லாப் பிள்ளைகளையும் தம்மைப்போல் பாவித்து வந்தார். இளவரசர் என்ற எண்ணமே இவருக்கு அப்பொழுதில்லை.

அக்கலாசாலையில் கல்வி கற்கும்போது, ஒரு சமயத்தில் நம்மிளவரசர் வியாதியடைந்தார். பிள்ளைகளே! நீங்கள் வியாதியாயிருக்கும்போது உங்களுக்குப் போஜனத்தில்பிரிய மிராதல்லவா? அதுபோல் நம் இளவரசருக்கும் சாப்பாட்டில் உருசி இல்லாமலிருந்தது. சரியாய்ச் சாப்பிடாததினாலும், வியாதியினாலும் நாளுக்குநாள் அவர் பலஹீனமடைந்து வந்தார். அதைக் கண்ட வேலைக்காரர் இவருக்குத் தனியாய் விசேஷமான பலவகை உணவுகளைச் செய்து சாப்பாட்டு மேசையின்மேல் இவருக்குத் தனியாய் வைத்தார்கள். எல்லாப் பிள்ளைகளும் சாப்பிடும்போது நம்மிளவரசருக்குத் தனியாய் வைத்திருக்கும் உணவுகளை மற்றப் பிள்ளைகள் பெருதைக் கண்டு, எல்லாப் பிள்ளைகளுக்கும் சாதாரணமாய்க் கொடுக்கும் சாப்பாட்டில் அவருக்கு உருசியாயிருந்ததை மட்டும் புசித்துவிட்டு, அவருக்கென்று தனியாய் செய்துவைத்த உணவுகளைத் தள்ளிவிட்டார். பிள்ளைகளே! அவர் ஏன் அப்படிச் செய்தார் என்று நீங்கள் யோசிக்கலாம். அவர் மாலுமி வித்தியாசாலையில் சேரும்போது அவர் தகப்பனாராகிய நம் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர், அவருக்கு, “உனக்கும் மற்றப் பிள்ளைகளுக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை, ஆகையினால் மற்றப் பிள்ளைகளுக்கு என்னென்ன நடக்கிறதோ அதைத்தான் நீயும் எதிர்ப்பார்க்கக்கூடும். நீ ஓர் இராஜகுமாரனென்கிற பெருமை உன்னிடத்தி லிருக்கவே கூடாது,” என்று உபதேசம் செய்தனுப்பினார். இந்த நற்புத்திகளை நம்மிளவரசர் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருந்ததுதான் அவர் அப்படிச் செய்ததின் காரணம். பிள்ளைகளே, நம்மிளவரசரின் குணம் எப்படிப்பட்டது பார்த்தீர்களா! நீங்களும் அவரைப்போல் உங்கள்பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

உயர்தரப் படிப்புக்காக நமது இளவரசர் பிறகு ஆக்ஸ் போர்ட் காலேஜிக்கு அனுப்பப்பட்டார். அவர் அவ்விடத் தில் மூன்று வருஷம் கல்வி கற்றூர். அக்காலத்தில் அங் குள்ள போதகாசிரியர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்தும், பாடங்களை நன்றுப் படித்தும், அவர் தம் ஆசிரியர்களை மகிழ்வித்தார். ஜர்மன் யுத்தம் உண்டான படியாலும், யுத்த முனைக்குப் போக இவர் விரும்பியபடியாலும் அதிக காலம் அவ்விடம் கல்வி கற்க நம்மிளவரசருக்குச் சாத்தியப் படவில்லை. பிள்ளைகளே! நீங்கள் இந்த ஜர்மன் மகா யுத்தத் தைப் பற்றிக் கேள்விப்பட் டிருக்கிறீர்க ளல்லவா? ஜர்மனி என்பது, யூரோப் கண்டத்திலுள்ள ஒரு தேசம். அக் காலத்தில் அத்தேசத்தைக் கேய்சர் என்னும் ஓர் சக்ரவர்த்தி ஆண்டார். அவர் தம்மை யுத்தத்தில் வெல்லும் போர் வீரர் ஒருவரும் இல்லையென்று கர்வங்கொண்டு இந்த யுத் தத்தைத் திடீரென்று ஆரம்பித்தார். ஆனல் முடிவில் அவர் தோல்வி யடைந்தார். அவர் சேனையாட்களோ கொடிய குரூரமுடையவர்கள். இந்த யுத்தத்தில் பலபேர்களை அவர் கள் கொன்றூர்கள். இந்த யுத்தம் 1914-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் ஆரம்பித்தது. நமதிளவரசருக்கு அப்பொழுது வயது இருபது தான். அவர் சேனையில் அப்பொழுதே சேர்ந் திருந்தபோதிலும் அவருக்குப் போதுமான யுத்தப் பயிற்சி இருக்கவில்லை. அதனல் அப்பொழுது யுத்த சேனுதிபதியா யிருந்த லார்ட் கிச்சனர் என்பவர் இவரை யுத்தமுனைக்குச் சேனைகளோடு அனுப்ப வில்லை. இருந்த போதிலும் நமது இளவரசர் சேனுதிபதி யிடம் சென்று தம்மை யுத்தமுனைக்கு அனுப்பும்படி மன்றாடிக் கேட் டுக்கொண்டார். அப்பொழுதும் அவரை அவர் அனுப் பச் சம்மதிக்கவில்லை. பிறகு நமது இளவரசர் சேனுதி பதியைப் பார்த்து, "என்னை ஏன் யுத்த முனைக்கு

அனுப்பப் பயப்படுகிறீர்? நான் யுத்தமுனையில் கொல்லப் பட்டாலென்ன. மற்றும் என்னுடன் பிறந்தவர்கள் நால்வரில்லையா?" என்று கேட்டார். லார்டு கிச்சனர் இவரது மனத்துணிவையும் தைரியத்தையும் கண்டு சந்தோஷித்



ஐந்தாவது ஜார்ஜ் அரசர்.

தாரானாலும், இவரை அப்பொழுது யுத்தமுனைக்கு அனுப்பவில்லை. பிள்ளைகளே! இவரது மனோதிடத்தையும், தைரியத்தையும் நீங்கள் எல்லோரும் மெச்சத் தக்கதல்லவா? நம் இளவரசரின் சுதேச பக்தி, சுதேசத்தைக் காப்பாற்றும் நிமித்தம் அவர்கொண்ட யுத்தப் பிரியம், சுதேசத்தின் க்ஷேமத்தினைக் கருதித் தம் உயிரையும் கொடுக்கத் துணிந்தது முதலிய நற்குணங்களில் நீங்கள் கண்வைத்து அவைகளைக் கற்றுப் பழகப் பாருங்கள். பிள்ளைகளே! ஒருவன் உயிரைக்காட்டிலும் அவன் செய்யவேண்டிய கடமையே

பெரிதாகும் என்பதை நம் இளவரசரிடம் கற்று அதன்படி நீங்கள் நடந்து கொள்ளுங்கள்.



வேல்ஸ் இளவரசர்

1914ம் ௵ நவம்பர் மாதத்தில் நம்மிளவரசர் பிரான்ஸ்

தேசம் சென்று அங்கு நான்கு வருடங்கள் யுத்த சேனையி லிருந்துதம் வேலையை ஒழுங்காகப் பார்த்து வந்தார். 1915ம் வருஷத்தில் இவர் தமது மோட்டார் வண்டியில் யுத்த முனைக் குச் சென்றார். அவ்விடத்தில் இவர் தம் வண்டியைத் தம் சாரதி வசம் விட்டு யுத்த சேனையுட் சென்று தம் வேலையை முடித்துக்கொண்டு ஐந்து நிமிஷத்தில் திரும்பினார். திரும்பி வந்து பார்க்கும்போது, எதிரிகளின் 'பாம்' என்னும் வெடி குண்டுகளால் தம் வண்டி உடைக்கப்பட்டும் சாரதி கொல் லப்பட்டும் இருந்ததை அவர் கண்டார். நம் இளவரசர் தப்பிப்பிழைத்ததே அதிக ஆச்சரியம். யுத்தத்தில் காயப் பட்டு ஆஸ்பத்திரிகளில் கிடந்தவர்களை நம் இளவரசர் அடிக் கடி போய்ப் பார்த்து அவர்களுக்கு தைரியமான வார்த்தை களைச் சொல்லி அவர்களை சந்தோஷப் படுத்திவந்தார்.

யுத்தம் முடிந்ததும் நம் இளவரசர் இங்கிலண்டுக்குத் திரும்பிப் போனார். நம் இளவரசரைச் சேர்ந்த தேசத்தின் ஒரு பாகத்தில் ஏழைக் குடிகள் வசிக்கிறார்கள். அக்குடி களிடத்தில் நம்மிளவரசருக்குப் பிரீதி அதிகம். அவர் தம் ஒழிவுகாலத்தை அக்குடிகளோடு கலந்திருந்து களிப் புடன் கழித்துவந்தார். அவர் அவ்வேழைக் குடிகளுக்குப் புதிய வீடுகள், புதிய பாதைகள் முதலிய வசதிகளை ஏற்படுத் தினார். பணக்காரரென்றும் ஏழையென்றும் பேதமில்லாமல் சமமாய் எல்லோருடனும் அவர் கலந்து உறவுகொண்டாடி வந்தார். அப்படியே எல்லோரும் அவரையும் நேசித்தார்கள்.

நம் இளவரசருக்குக் கடற் பிரயாணம் செய்வதில் அதிகப் பிரியம். அவர் கப்பலில் நெடுந்தூரம் கஷ்டப்பட்டு பிரயா ணம் செய்திருக்கிறார். கானடா, அமெரிக்காக் கண்டத் தைச் சேர்ந்த ஐக்கியமாகாணங்கள், நியூ ஜீலண்ட், ஆஸ்தி ரேலியா முதலிய இடங்களுக்கு அவர் போய் வந்திருக் கிறார்.

ஒரு காலத்தில் நம்மிளவரசர் ஆஸ்திரேலியாவில் ரேயில் வண்டியில் போய்க்கொண்டிருக்கையில் வண்டி தண்ட வாளக் கம்பியைவிட்டு நழுவிப்போய் தரையில் குடை கவிழ்ந்துவிட்டது. பிள்ளைகளே! அப்பொழுது நம் இளவரசர் என்ன செய்தார் என்று நினைக்கிறீர்கள்? அவர் பயப்படவில்லை. அவர் மனோ திடத்துடனும், சந்தோஷத்துடனும் வண்டிக்குள்ளிருந்து அடிபடாமல் வெளியே வந்தார். அவர் தைரியமே தைரியம். நீங்களும் அவரைப் போலவே தைரியத்தைக் கடைப்பிடித்து நடப்பீர்களென்று நம்புகிறேன். அங்கிருந்த எல்லோரும் இந்த விபத்தை பெரிய அபாயமாக நினைத்த போதிலும் நம் இளவரசர் அதை ஒரு சிறு விளையாட்டாக எண்ணி சந்தோஷித்தார்.

சாதாரணமாய் எல்லா விளையாட்டுகளிலும் நம் இளவரசருக்கு அதிக இஷ்டம். மீன் பிடித்தல், நீந்துதல் படவு தள்ளல், முதலியவற்றில் அவர் நிபுணர். புட்பால் (காலால் பந்தை உதைத்து விளையாடல்), கிரிகெட், டெனிஸ், கால்வ், மிருகவேட்டை, குதிரைச்சவாரி, மோட்டார் வண்டி ஓட்டுதல் முதலியவைகளில் அவர் நன்றாய்த் தேர்ந்தவர்.

அவருக்குப் புஸ்தகங்களைப் படிப்பதிலும், கப்பல் பிரயாணம் செய்வதிலும் அதிக சந்தோஷம். அவர் நமக்குப் பலவித நன்மைகளைச் செய்திருப்பதுடன் நமக்குப் பலவித நல்ல ஞானமான வார்த்தைகளைச் சொல்லியு மிருக்கிறார். அவரை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது.

கடவுளின் கிருபையால் நம் இளவரசர் அதிக காலம் இவ்வுலகில் நிலைத்து நிற்பாராக.

கடவுள் நம் சக்கரவர்த்தி ஐந்தாவது ஜியார்ஜ் மன்னரையும் அவரைச் சேர்ந்தவர்களையும் காப்பாற்றுவாராக.

# GOD SAVE THE KING

கர்த்தாவே, ராஜனை,
　　எங்கள் நல் வேந்தனை
தற்காருமேன் ;
　　வெற்றி கெம்பீரமும்
கீர்த்தி ப்ரதாபமும்
　　தீர்க்காயுள் ஆட்சியும்
நீர் ஈயுமேன்.

GOVERNMENT HOUSE,
MADRAS,
*Jan. 14th 1922.*

SIR,

I am desired by the Prince of Wales to thank you for sending the copies of the pamphlet which you have written for the children of the Madras Presidency, and which His Royal Highness was much interested to see.

Believe me,

Yours faithfully,
(Sd.) GODFREY THOMAS.

GOVERNMENT HOUSE,
MADRAS,
*3rd Jan. 1922.*

No. L—2-1.

DEAR MR. RAJAH,

I am to acknowledge with many thanks the receipt of your letter dated the 31st ultimo and two copies of "Prince Edward". I am to say that His Excellency considers it a most useful little book. Let me add my thanks for the copy you have given me.

Yours sincerely,
(Sd.) E. C. SMITH.